முன்னுரை

"The Strongest Warriors are these Two, "Time and Patience" (Leo Tolstoy) என்ற பொன்மொழிகளை உண்மை ஆக்குவதுபோல், முப்பத்தியெட்டு வருடங்களுக்கு பிறகு என் பிறப்பின் அர்த்தத்தை புரியவைத்த ஓர்பயணம் எனது ருஷிய பயணம். உலகின் புகழ்பெற்ற அறிஞரான லியோ டால்ஸ்டாய் அவரின் இல்லத்தில் நான் கால்பதித்த தருணம், என் வாழ்வில் மறக்கமுடியாத ஒன்று. நூறு வருடங்களுக்கு முன் என் முன்னோர் செய்த நற்செயலுக்காக இந்த வாய்ப்பு எனக்கு கிட்டியது. டால்ஸ்டாயின் சிறுகதைகளை தமிழ் மக்களுக்கு அறிமுக படுத்தியவர் எனது பாட்டனார் திரு ராவ் சாகேப் கு கோதண்டபாணி பிள்ளை அவர்கள். 1932ஆம் ஆண்டு "கதைமணிக்கோவை" என்கின்ற தமிழ் புத்தகத்தின் வழியாக டால்ஸ்டாயின் மூன்று உயர்ந்த கருத்துக்கள் உடைய சிறுகதைகளை தமிழில் மொழிபெயர்த்து பாடபுத்தகமாக வெளிக்கொண்டு வந்தார் கு கோதண்டபாணி பிள்ளை.

தொன்னூறு ஆண்டுகளுக்கு பிறகு இவ்புத்தகம் இயங்கியதை அவரின் அருமை மகள் மற்றும் எனது பாட்டி திரு ராஜலக்ஷ்மி அரங்கநாதன் அவர்களின் தனிப்பட்ட நாட்குறிப்பின் மூலமாக அறிந்துகொண்டேன். அன்று ஆரம்பித்த தேடல் இன்றுவரை என்னுள் அணையா தீபமாக எரிந்துகொண்டு வருகிறது. கதைமணிக்கோவை புத்தகத்தை தேடாத இடம் இல்லை, கேட்காத புத்தகக்கடை இல்லை, கடைசியில் அந்த கல்விச்செல்வதை எழும்பூரில் உள்ள ஆவண காப்பகத்தில் கண்டறிந்தேன். அந்நாள் என்வாழ்வில் மறக்கமுடியாத ஒன்று, இத்தருணத்தில் அங்கு பணி செய்யும் தலைமை நூலகர் ஜெகன் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

என் தேடலுக்கு எனக்கு பெரும்துணையாக இருந்த எனது துணைவியாருக்கும் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

இலக்கியம் பற்றியும் டால்ஸ்டாய் பற்றியும் பெரிதும் அறியாத என்னை இன்று டால்ஸ்டாய் வாழ்க்கை வரலாற்று நிபுணராக அங்கீகரித்து அவரின் வாழ்க்கை வரலாற்றை ஆவணப்படமாக இயக்க எனக்கு ஒரு வாய்ப்பும் அளித்திருக்கிறார் டால்ஸ்டாய் தோட்டத்தின் இயக்குனர் திருமதி ஏகதேரினா டால்ஸ்டாயா (Ekaterina Tolstaya). வெகு விரைவில் அப்பணி தொடங்கும்.

நான் ருஷியாவில் இருந்த நாட்கள் "தாயகம்" போல் உணரவைத்து, என்னை அன்பாக கவனித்து, உபசரித்து ஒரு கைக்குழந்தையை போல் தாயகம் திருப்பி அனுப்பிய டால்ஸ்டாய் தோட்டத்தின் ஆராய்ச்சி மையத்தின் தலைமை

நிர்வாகியான கலினா அலெக்சீவா (Galina Alakseeva) அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

மக்கள் மனதில் நர்குணங்களை விதைக்கும் நோக்கத்திலேயே இவ்புத்தகத்தை எழுதியுள்ளதாக "கதைமணிக்கோவை" முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார் கு கோதண்டபாணி பிள்ளை அவர்கள் , அதேபோல் இந்த பயணம் என்னுள் பல நர்குணங்களை விதைத்தது. காதல், பாசம், பேரன்பு, மனிதநேயம், நீதி போன்ற உயர்ந்த கொள்கைகளை உலகிற்கு எடுத்துரைத்தவர் லியோ டால்ஸ்டாய், அவர் தன் படைப்புகள் மூலம் சொன்ன கருத்துக்களின் அடையாளமாக அவர் வாழ்க்கையை வாழ்ந்துகாட்டினார். அவர் ஒரு "மகா கலைஞர்" அந்த மகா கலைஞர் வாழ்ந்து , தன் படைப்புக்களை உருவாக்கிய அவரின் வீட்டில், ஒரு வாரம் இந்த க்ஷத்ரிய தமிழனும் தங்க ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்கிய எனது பாட்டனார் அவர்களுக்கு என் "புகழ் வணக்கம்".

2019இல் நிகழ்ந்தது என் பயணம். "கதைமணிக்கோவை" புத்தகத்தை டால்ஸ்டாய் பரம்பரையில் இன்று அந்த தோட்டத்தை நிர்வாகம் செய்துவரும் அவரின் நான்காம் தலைமுறை பேரன் "விளாடிமிர் டால்ஸ்டாயிடம்" (Vladimir Tolstoy) அன்பளிப்பாக கொடுத்தேன், அவரின் மகனான ஆண்ட்ரி விளாடிமிர் டால்ஸ்டாய் (Andrei Vladimir Tolstoy) இன்றுவரை எனக்கு ஒரு நல்ல நண்பனாக திகழ்ந்து வருகிறான். விளாடிமிர் டால்ஸ்டாய் அவர்கள் ருஷிய அதிபர் விளாடிமிர் புடின் (Vladimir Putin) அவர்களின் கலாச்சார ஆலோசகர் ஆவார். எனது இந்த அன்பளிப்பின் கைமாறாக யாசனய போல்யாணா (Yasnaya Polyana) அவர்களின் ஆண்டு விழா மலரில் எனது கட்டுரையை வெளியிட்டனர். கட்டுரையின் தலைப்பு "Leo Tolstoy Influence on Tamil Literature".

இச்செயலுக்காக இன்றுவரை இந்தியாவிலும், தமிழ்நாட்டிலும் என்னை யாரும் பாராட்டவும் இல்லை, இச்செயலுக்கான எந்த அங்கீகாரமும் எனக்கு கிடைக்கவில்லை, அதை பற்றி எனக்கு கவலையும் இல்லை. ஏன் என்றால் இதை நான் சாதனையாக பார்க்கவில்லை, எனது கடைமையாகவே கருதுகிறேன். "நான் ஒரு கருவி" அவ்வளவே !!!

இரண்டாயிரம் ஆண்டுகள் தொன்மையான மொழி தமிழ் மொழி, உலகில் தோன்றிய முதன் மொழி தமிழ். "உலகில் எட்டு கோடி மக்கள் பேசும் தமிழ் மொழியின் பிரதிநிதியாக இன்று உங்கள் முன் நிற்கிறேன்" (I'm proud to represent 80 million Tamil speaking people living across the world) என்று எனது உரையை ஆரம்பித்தேன் டால்ஸ்டாய் தோட்டத்தில். அது என் தாய் மொழிக்கு நான் அளிக்கும் அன்பு காணிக்கை.

பயண குறிப்பை எழுதிய பின்பு இன்றுவரை அதை யாரிடமும் சொல்லவில்லை காண்பிக்கவும் இல்லை, ஒரு சிறுகுருவி தன் சிறகுகளை விரிக்க ஆசைப்படும் போல், நானும் ஆசையோடு காத்திருதேன். திரு டாக்டர் பொற்கோ அய்யாவை சந்தித்த பின்பு என்சிறகுகளை விரிக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது, அதற்கு காரணம் அவரே. அவருக்கு எனது மனமார்ந்த நன்றிகள். இதோ பின்வரும் நிகழ்வுகளில் இச்சிறு குருவி ருஷியாவில் பறந்த அனுபவத்தை கேளுங்கள்.

உரக்க சொல்வோம் ருஷிய கிராமங்களில்

<u>நாள் ஒன்று</u>

எனது இரண்டாவது ருஷிய பயணம் 2019ஆம் ஆண்டு அரங்கேறியது..எனது பாட்டனார் உயர்திரு ராவ் சாகேப் கு கோதண்டபாணி பிள்ளை அவர்கள் ருஷிய இலக்கியத்தை தமிழ்நாட்டிற்கு அறிமுகம் செய்த பெருந்தொண்டிற்காக நான் அங்கு சென்றேன்!!

ருஷிய பேரறிஞர் லியோ டால்ஸ்டாய் அவர்களின் முத்தான மூன்று சிறுகதைகளை திரு கு கோதண்டபாணி பிள்ளை அவர்கள் 1932ஆம் ஆண்டு "கதைமணிக்கோவை" என்கின்ற புத்தகத்தின் மூலம் தமிழில் மொழி பெயர்த்தார்!! இவ்புத்தகம் இருபது ஆண்டு காலம் தமிழ்நாட்டில் பாடநூலாக இருந்துள்ளது என்பதை இங்கே உரக்க சொல்வேன் !!

எனது பாட்டனார் மாவட்ட வட்டாசிரியர் ஆகவும் அயல்நாட்டு செல்கை கட்டுப்பாளர் ஆகவும் பணிபுரிந்தார்!!

பல தேடலுக்கு பின் இவ்புத்தகத்தை சென்னையில் உள்ள ஆவண காப்பகத்தில் கண்டறிந்தேன், அட்டை மற்றுமே "கதைமணிக்கோவை" உள்ளே இருந்தது ருஷிய கம்யூனிஸ்ட் மற்றும் அவர்களின் சிகப்பு ராணுவம் படையில் தொண்டாற்றிய இம்மானுவல் காசாகிவிச் (Emmanuil Kazakevich) என்கிற எழுத்தாளர் எழுதிய "நண்பனின் இதயம்" (Heart of a Friend) என்கிற கதை!! இரு கதைகளையும் படித்து இது டால்ஸ்டாய் சிறுகதைகள் இல்லை என்று அரசாங்க நூலக காப்பாளரிடம் கூறினேன்,டால்ஸ்டாய் அட்டைப்படம் கம்யூனிஸ்ட் கதைகள் என்று கலந்து வைத்து ஆவண படுத்தியிருக்கிறார்கள் !! விரைவில் மாற்றுகிறேன் என்று நம்பிக்கை கொடுத்தார் நூலக காப்பாளர் !!!

"கதைமணிக்கோவை" (1932) புத்தகத்தின் ஒரு பிரதி கிடைத்த பின் லியோ டால்ஸ்டாய் அருங்காட்சியகம் எங்கு உள்ளது என்று தேடினேன், இரண்டு பெரும் அருங்காட்சியகம் ருஷிய நாட்டில் உள்ளது என்பதை கண்டறிந்தேன், மாஸ்கோவில் ஒன்றும் அவர் பிறந்து வளர்ந்த தோட்டமான யாசனய போலியானா (Yasnaya Polyana) கிராமத்தில் இன்னொன்றும் உள்ளது என்பதை அறிந்தேன்!!

முதலில் யாசனய போலியானா அருங்காட்சியகத்திற்கு புத்தகத்தின் டிஜிட்டல் பிரதியை அனுப்பினேன், மின்னஞ்சல் அனுப்பி மூன்றே நாளில் அங்கு ஆராய்ச்சி மையத்தின் தலைமை நிர்வாகியான கெலினா அலெக்சீவா (Galina Alakseeva) என்பவரிடம் இருந்து மின்னஞ்சல் ஒன்று வந்தது!! இந்த புத்தகத்தை பெற்றதுக்கான சான்றும் அதற்கான நன்றியும் தெரிவித்து அத்துடன் அங்கு செப்டம்பர் மாதம் நடக்கவிருக்கும் பதினான்காவது உலக மொழிபெயர்ப்பாளர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள அழைப்பிதலும் வந்தது!!

மின்னஞ்சலை படித்தவுடன் பேராந்தம், அத்துடன் அது வந்து சேர்ந்த தருணம் நான் எனது இரண்டு வயது மருமகளுடன் சாலிகிராமத்தில் உள்ள ஒரு பூங்காவில் விளையாடி கொண்டு இருந்தேன், அவள் ஊஞ்சல் ஆடி கொண்டுஇருந்தால் என் மனமும் சந்தோஷத்தில் ஊஞ்சலாடிக்கொண்டு இருந்தது!!

பயணத்திற்கான ஏற்பாடுகளை செய்ய ஆரம்பித்தேன்!! பயணத்திற்கான நாளும் நெருங்கியது!! செப்டம்பர் மாதம் எட்டாம் தேதி என் பயணநாள்!! இரவு விமானம் ,பெற்றோர், மனைவி தங்கை ,மருமகளுடன் விமான நிலையம் வந்தடைத்தேன்!! அனைவரும் என்னை வழியனுப்பி வைத்தார்கள், மருமகள் தூங்கிவிட்டாள் ஆனாலும் அவளுக்கும் தெரியும் மாமா ருஷிய நாட்டிற்கு செல்கிறார் என்று, விமான பயணம் அதிகாலை நான்கு மணிக்கு தொடங்கியது!!

சென்னையை விட்டு துபாயை நோக்கி சீறி பாய்ந்தது ஏர் அரேபியா விமானம்!! செப்டம்பர் ஒன்பதாம் தேதி காலை ஏழு மணிக்கு துபாய் விமான நிலையம் வந்தடைத்தேன், இரண்டுமணி நேரத்திற்கு பிறகு துபாய் விமானம் நிலயத்திரிலிருந்து ருஷிய நாட்டின் தலைநகர் மாஸ்கோவை நோக்கி பறந்தது விமானம்!! பயணத்தின் பொழுது ரஷியாவில் மருத்துவம் பயிலும் இரண்டு தமிழ் மாணவர்கள் அறிமுகம் ஆனார்கள், அவர்கலுடன் சிறுது நேரம் உரையாடிகொண்டு இருந்தேன், ரஷ்யாவை நெருங்கிய நேரம் அங்கு விமானம் தரையிறங்கும் முன் காற்றுஅழுத்தம் அதிகமாக இருப்பதால் சற்று தாமதத்திற்கு பின் விமானம் மெல்ல மெல்ல காற்றில் மிதந்து மொஸ்கோ டோமோடெடோவோ (Domodedovo Airport) விமான நிலையத்தை வந்தைடைந்து!!

Domodedovo Airport

ருஷிய நாட்டில் 2013கு பிறகு இரண்டாம் முறை கால் பதிக்கும் நேரம் இது !! முதல் முறை இந்திய அரசாங்கத்தின் கலாச்சார தூதுவராக பயணித்தேன், இவ்முரை என் முன்னோர்களின் நன்செயலுக்காக கால்பதிக்கிறேன் !!!

விமான நிலையத்தை விட்டு வெளியில் செல்லும் வழியில் ஒரு நிகழ்வு , ஊனமுற்றோர் ஊர்தியில் ஒரு தமிழ் பெண்மணி இரண்டு கால்கள் இல்லை, தன் மகனை காண மாஸ்கோ வந்துள்ளார், என்னிடம் அந்த அம்மா அணுகினார், "தம்பி என் மகன் என்னை அழைத்து செல்ல வருகிறேன் என்று சொல்லியிருந்தார் ஆனால் அவர் எந்த நுழைவாயில் நிற்கிறார் என்று

தெரியவில்லை" "தம்பி என்தோலைபேசியில் சார்ஜ் இல்லை உதவி செய்வீர்களா"? என்று கேட்டார் !! அந்த பெண்மணியிடம் இருந்து அவர் மகனின் தொலைபேசி என்னை பெற்று அவருக்கு என் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டேன், அவருடன் பேசினேன் உங்கள் அம்மா நுழைவாயில் மூன்றில் நிற்கிறார் தயவு செய்து அவர்களை அங்கு வந்து அழைத்து செல்லவும் என்று சொல்லி தொலைபேசியை அவர் அம்மாவிடம் கொடுத்தேன், அவர்கள் பேசினார்கள்!!! அம்மாவும் மகனும் இணைந்தார்கள் , எனக்கு நன்றியும் தெரிவித்தார்கள், மகிழ்ச்சியுடன் அங்கிருந்து விடைபெற்றேன்!!!

ஹோட்டல் கேஸ்டில் (Hotel Castle-zamok) என்கின்ற விடுதியில் தங்குவதற்காக முன்பதிவு செய்திருந்தேன் அவர்கள் என்னை அழைத்து செல்வதற்காக வாகனத்தை விமான நிலையத்திற்கு அனுப்புவதாக ஒப்புக்கொண்டார்கள் வாகனம் வருவதற்காக காத்திருந்தேன்.மாஸ்கோ நேரம் மதியம் ஒரு மணி வாக்கில் வாகனம் வந்தது வாகனத்தில் அமர்ந்து ஹோட்டல் கேஸ்டிலை நோக்கி பயணித்தேன்.

தலைநகரின் ஆர்ப்பாட்டமான வாழ்க்கையை துறந்து கிராமத்தை நோக்கி வாகனம் பயணித்தது. ஹோட்டல் இருக்கும் கிராமத்தின் பெயர் கோர்கி லேநின்ஸ்கி (Gorki Leninskie) ருஷிய புரட்சியாளர் லெனின் அவர்களின் தோட்டம் அங்கு உள்ளது,மிகவும் பழமையான கிராமம், அமைதி சூழ்ந்து காணப்பட்டது. வாகனம் ஹோட்டலை வந்தைடைந்து. எனது கடவுசீட்டை காண்பித்தபின் எனக்கான அறை ஒதுக்கப்பட்டது, அதற்கான சாவியும் கொடுக்கப்பட்டது. மிக பழமையான கோட்டை போல் தோற்றம் அளித்த அந்த விடுதிக்குள் நடந்தேன் ராஜ ராஜ சோழனைப்போல்.

எனது அறைக்குள் நுழைந்தேன் அரண்மனை போல் தோற்றம் அளித்த அறைக்குள் எனது பொருள்களை வைத்துவிட்டு சற்றே ஓய்வுஎடுத்தேன் மாலை நான்கு மணி வரை சிறு துக்கம் எழுந்தவுடன் பசி விடுதியிலேயே உணவகம் ஒன்று இருந்தது உணவருந்துவதற்காக அங்கு சென்றேன் மெல்லிய வெளிச்சத்தில் அழகாக தோற்றமளித்தது அந்த உணவகம். அன்பாக அணுகினார்கள் அங்குஇருந்த ருஷிய பெண்மணிகள். உணவை ஆர்டர் செய்தேன்,சிக்கன் சூப், அரிசியும் ,சிக்கன் கிரேவியும் ஒரு பீரும்.எனக்கு எப்பொழுதாவது மது அருந்தும் பழக்கமும் உள்ளது என்பதை இங்கு பதிவிடுகிறேன்.

உணவு அருந்தியபின் ஒரு சிறு நடைப்பயணத்தை மேற்கொண்டேன் மாலை ஐந்து மணி இருக்கும் சூரியன் மெல்ல மேற்கில் மறைந்துகொண்டு இருந்தது மிகவும் ரம்மியமான மாலை வெயில் அந்த அழகிய கிராமத்தை தழுவிக்கொண்டு இருந்தது. அந்த அழகிய காட்சி என்கண்களை கவர்ந்தன.காதல் கொண்டேன் இயற்கையின் மேல், என் தொலைபேசியில் உள்ள காமிராவின் மூலம் அழகிய மாலை பொழுதை ஆவணப்படுத்தி கொண்டேன்



இரவு ஏழுமணி அளவில் விடுதிக்கு திரும்பினேன்.ஒரு மணி நேரம் தொலைபேசியில் எனது குடும்பத்தாரிடம் பேசிவிட்டு குளிர்ந்த ருஷிய நீரில் நீராடினேன்.இரவு மிகவும் குளிர் ஆனால் அது மனதிற்கும் உடம்பிற்கும் ஆனந்தத்தையே கொடுத்தது. குளிர்ந்த ருஷிய இரவை கட்டியணைத்து கொண்டு கனவுகளுடன் உறங்க சென்றான் செந்தமிழ்செல்வன்.

இரண்டாம் நாள்

செப்டம்பர் 10. இது மிகவும் முக்கியமான நாள் ஏன் என்றால் இன்று தான் நான் டால்ஸ்டாய் தோட்டத்திற்கு செல்லவுள்ளேன். மாஸ்கோவில் இருந்து சற்று தூரத்தில் உள்ள அணினோ மெட்ரோ (Annino Metro Station) ஸ்டேஷன் தான் மொழிபெயர்ப்பாளர்கள் அனைவரும் கூடும் இடம்.அங்கு மதியம் மூன்று மணியளவில் எங்களுக்கான வாகனம் காத்துகொண்டு இருக்கும் என்று ஒரு மாதத்திற்கு முன்பே எனக்கு மின்னஞ்சல் மூலம் தெரிவித்து விட்டார்கள் !!

ருஷிய காலை விடிந்தது, எழுந்து, மதியம் செல்வதற்காக கார் ஒன்றை புக் செய்துவிட்டு உணவு விடுதிக்கு சென்றேன் !! அங்கே தான் ஒரு கூற்று, கேளுங்கள் !! செஃப் என்னை அன்புடன் வரவேற்றார். நீங்கள் எந்த நாட்டில் இருந்து வருகுறீர்கள்? என்று கேட்டார், தமிழ்நாடு, இந்தியா என்று சொன்னேன், சந்தோஷம் எனக்கு இந்தியா தெரியும் என்று சிரித்தார்.. நான் மும்பையில் சிறிது மாதங்கள் வேலை பார்த்துள்ளேன் என்று சொல்லிவிட்டு என்ன சாப்புடீர்கள்? என்று அன்பாக கேட்டார், சிக்கன் உள்ளதா? என்று கேட்டேன், இருக்கிறது என்றார் !! முழுசா, பாதியா? என்று கேட்டார் , பாதி போதும் என்றேன் !! சரி நான் உங்களுக்காக கோழி ஒன்றை உரித்து சமைத்துக்கொண்டு வருகிறேன் என்று சென்றார், சிக்கன் வரும் வரை ஒரு பீர் குடித்தேன்,சிக்கன் வந்தது, முழு கோழி, தட்டில் மேலே வெங்காய தாள்களை ஜோடித்து கொண்டுவந்தார், என்முன்னே வைத்துவிட்டு, "பான் அப்பெட்டி" என்று சொல்லிவிட்டு சென்றார்..

ஒரு முழுக்கோழியை என்னால் சாப்பிட முடியாது என்று எனக்கு தெரியும் ஆனால் அவருக்கு தெரியாது, கோழியுடன் போராட தொடங்கினேன், பாதி கோழியைக்கூட சாப்பிடமுடியவில்லை ,வயிறு நிரம்பியது, அக்கம் பக்கம் பார்த்தேன் யாரும் இல்லை, மீதிக்கோழியை அப்படியே வைத்துவிட்டு எனது அறையை நோக்கி நடந்தேன்!! வயிறை விட கண்கள் பெரிது என்பார்கள் அது தான் உண்மை இங்கு !! மதியம் இரண்டு மணி, கார் வந்தது, அண்ணினோ மெட்ரோ ஸ்டேஷனை நோக்கி எனது பயணம் தொடங்கியது! இங்கும் ஒரு கூற்று உள்ளது, கேளுங்கள்.

ஓட்டுநர் சீனக்காரர், பத்துநிமிட பயணத்திற்கு பிறகு என்னிடம் பேச தொடங்கினர்,எங்கு செல்கிறீர்கள்? என்று கேட்டார் டால்ஸ்டாய் தோட்டத்திற்கு என்றேன்! எதற்காக? என்று கேட்டார், மாநாட்டில் கலந்து கொள்ள என்று சொன்னேன்! புகைபிடிக்கிறீர்களா? என்று கேட்டார், அவரிடம் இருந்த

சிகரெட்டை காட்டினார் என்னிடம் சிகரெட் உள்ளது என்றேன், என்னுடைய சிகரெட்டை நீங்கள் பிடித்து பாருங்கள், ருஷியா சிகரெட், உங்கள் சிகரெட்டை நான் பிடிக்கிறேன் என்று சொல்லி அவரிடம் இருந்த சிகரெட்டை என்னிடம் கொடுத்தார் !! என்னிடம் இருந்ததை அவரிடம் கொடுத்தேன், இருவரும் சிகரெட்டை பரிமாறி கொண்டு பயணித்தோம், இந்தப்பயணத்திற்கு எவ்வளவு தருவீர்கள்? என்று கேட்டார், 'எழுநூறு ருபேல்' (700 Ruble) என்று சொன்னேன். 'ஆயிரம் ருபேல்' கொடுங்கள் என்று சொன்னார் , இல்லை, உங்களை புக் செய்த ஹோட்டலில் எழுநூறு என்று தான் சொன்னார்கள் என்றேன்! அவர் ஆமைதி ஆகிவிட்டார். அவர் புகைத்துக்கொண்டு இருந்த சிகரெட்டையும் அணைத்து விட்டார், நான் புகைத்துக்கொண்டு இருந்த சிகரெட்டையும் அணைக்க சொன்னார், நட்பு முறிந்தது!! அண்ணினோ மெட்ரோ ஸ்டேஷனும் வந்தது !! ஸ்டேஷனுக்கு வலது புறத்தில் இருந்த மெக்டொனால்ட் உணவகம் பக்கத்தில் நிறுத்தினார், எனது பொருள்களை இறக்கி வைத்துவிட்டு, சென்று வருகிறேன் என்றுகூட சொல்லாமல் சென்று விட்டார் எனது ஆருயிர் சீன நண்பர் !!!

அண்ணினோ மெட்ரோ ஸ்டேஷனில் மொழிபெயர்ப்பாளர்கள் அனைவரும் ஒன்றுகூடினோம்!! பிரிட்டன், அமெரிக்கா, ரஷியா, துருக்கி, இஸ்ரேல், மாசிடோனியா, ஜப்பான், பிரான்சு ஆகிய நாடுகளில் இருந்து எழுத்தாளர்கள், ஆராய்ச்சி வல்லுனர்கள் வந்திருதார்கள்!! அனைவரும் ஒன்றுகூடிய பிறகு எங்களுக்கான ஒருங்கிணைப்பாளர் 'அலெக்சாண்டர்' எல்லோரையும் வாகனத்தை நோக்கி அழைத்து சென்றார்!! வாகனத்தில் அனைவரும் அமர்ந்தோம், நான் கடைசி இருக்கையில் அமர்ந்தேன்,எனக்கு பக்கத்தில் 'கோஸ்டா' (Kosta Solev) என்கிற மெசடோனியன் (North Macedonia) மற்றும் எனக்கு முன்னால் துருக்கியை சேர்ந்த 'சாபரி' (Sabri Guzes) மற்றும் பிரான்ஸ்சை சேர்ந்த 'கரேன்' (Karen) என்கிற பெண்மணியும் அமர்ந்துஇருந்தார்கள் !! எனது வலது புறத்தில் சொல்கிறேன் இருங்கள் !!

எனது வலதுபுறத்தில் ஒரு ருஷிய பெண்மணி அமர்ந்துஇருந்தாள், அரைமணி நேரம் பயணத்திற்கு பின்பு அவள் என்னிடம் பேச ஆரம்பித்தாள், எனது சகல விவரங்களையும் கேட்டறிந்தாள், அவளின் சகல விவரங்களையும் என்னிடம் கூறினாள், எங்கள் இருவரின் பேச்சை கேட்டுக்கொண்டே கோஸ்டா தூங்கிவிட்டான் !! எனது "கதைமணிக்கோவை" புத்தகத்தை காண்பிக்க சொல்லிக்கேட்டாள், புத்தகத்தை காட்டினேன், இது மிகவும் பெருமையான விஷயம் உங்கள் பாட்டனார் மிகப்பெரிய படைப்பாளி என்று கூறினால்!! மாஸ்கோவில் இருந்து துலா (Tula) செல்லும் வரை ஏறத்தாழ மூன்று மணி நேரம் நாங்கள் இருவரும் பேசிக்கொண்டே இருந்தோம்,அவளுக்கு இந்திய பெண்கள் அணியும் சாரி பிடிக்கும் என்று கூறினால், இந்திய பெண்கள் மிகவும் அழகாக இருப்பார்கள் என்று அவள் சொன்னாள், ஆமாம் என்று எனது பாட்டி

'ராஜலக்ஷ்மியின்' புகைப்படத்தை காட்டினேன் !! (ராஜலக்ஷ்மி பாட்டி கு கோதண்டபாணி பிள்ளை அவர்களின் மகள்) இவர்கள் மிகவும் அழகாக இருக்கிறார் என்று சொன்னாள், போன்சிரிப்போடு!!

டால்ஸ்டாய் தோட்டம் வருவதுவுண்டா? என்று கேட்டேன், அடிக்கடி வருவேன் என்று சொன்னாள், அவர்கள் குடும்பத்தில் குதிரை வளர்ப்பதாகவும் அடிக்கடி அங்கு குதிரைகளை ஓட்டிக்கொண்டு வருவது வழக்கம் என்று அவள் மேலும் கூறினாள் !! அவள் பெயர் "கேத்தரின்" (Catherine) அவள் கிராமத்து பெண்,என்னுடன் வெகு நாட்கள் பழகியதுபோல் பயணம் முழுவதும் பேசிக்கொண்டே வந்தவள் துலா வந்தவுடன் அவள் தோழியுடன் இறங்கினால், இறங்கும் முன்பு எனது மின்னஞ்சல் முகவரியும் எனது முழுப்பெயரையும் கேட்டாள், எழுதி கொடுத்தேன் !! அன்புடன் வாங்கிக்கொண்டு இறங்கியவுடன் வாகனம் செல்லும் வரை என்னை நோக்கி கையசைத்து நகர்ந்தாள்!! வாகனமும் நகர்ந்தது,யாசனய போலியானாவை நோக்கி. எனது பயணத்தின் முதல் தோழி அவள் !!!

மரங்களால் சூழ்ந்து இருந்த சாலையில் ஊர்ந்து சென்றது எங்கள் வாகனம், டால்ஸ்டாய் தோட்டம் என்னை அன்புடன் வரவேற்றது!! வாகனம் எங்களுக்காக ஒதுக்கப்பட்ட விடுதியின் முன்னாள் நின்றது, எங்களை வரவேற்க 'கலினா' மற்றும் அமெரிக்காவை சேர்ந்த 'ஆண்ட்ரே' (Andrew Kotchoubey) காத்திருந்தனர், இருவரும் ஒருவர் ஒருவறையாய் வரவேற்றனர், நான் வாகனத்தில் இருந்து இறங்கியதும் "வெங்கடேஷ் from இந்தியா வெல்கம் டு ரஷியா" என்றார், ஆங்கிலத்தில் நீங்கள் ப்ராமணரா? என்று கலினா கேட்டார்,இல்லை நான் 'சத்ரியன்' என்று சொன்னேன்!!

பிறகு அனைவரும் உள்ளே சென்று அமர்ந்தோம், தங்குவதற்கான அறைகள் ஒதுக்கப்பட்டது, எனக்கு ஐந்தாவது மாடியில்,அறையின் என் 514, அறைக்கு

சென்று பொருள்களை வைத்துவிட்டு கதவை திறந்தேன், கண் முன்னே தெரிந்தது வெறும் மரங்கள் தான் பிரச், (Birch) மேப்பிள், (Maple) மரங்கள் காற்றில் நடனம் ஆடிக்கொண்டு இருந்தன,என் கண்ணனுக்கு எட்டிய தூரம் வரை தெரிந்தது பச்சை வயல்வெளி மட்டுமே, ஆயிரம் ஏக்கர் பரப்பளவு உள்ள டால்ஸ்டாய் தோட்டம் என்கண்முன்னே தெரிந்தது !! இயற்கை ஜீவிக்கும் இடம் இதுதான் என்று அறிந்தேன் !! சுத்தமான காற்று, ரம்மியமான மாலை, டால்ஸ்டாய் எழுதிய அணைத்து படைப்புகளும் இங்கிருந்து தான் வந்தன, வராதா பின்? இப்படி ஓர் இடத்தில் இருந்தால் கலை நம் மடியில் தவழும், சற்று நேரம் என்னையே மறந்து நின்றுகொண்டு இருந்தேன்!!

எட்டு மணிக்கு இரவு உணவு உன்ன சென்றேன், என்னுடன் கோஸ்டா மற்றும் கிரில் (Kirill) என்கிற ரஷியன் உணவருந்தினர், உணவு அருந்தியபின் நான் புகைபிடித்து கொண்டுஇருந்தேன் என்னுடன் கிரிலும் அவனது தோழியும் இணைந்தனர், சற்று நேரம் பேசிவிட்டு நான் என் அறைக்கு சென்றேன்!! காலை மொழிபெயர்ப்பாளர்கள் மாநாட்டின் முதல் நாள், விடியலை எதிர்நோக்கி உறங்க சென்றான் இந்த "வன்னியகுல சத்ரியன்" !

மூன்றாம் நாள்

September 11. "உலக மொழிபெயர்ப்பாளர்கள் மாநாடு"

பதினான்காவது உலக மொழிபெயர்ப்பாளர்கள் மாநாடு!! (14th International seminar on translators of Leo Tolstoy) டால்ஸ்டாய் தோட்டத்தின் இயக்குனர் 'ஏகதேரினா' டால்ஸ்டாயாவின் (Ekaterina Tolstaya) வரவேற்பு உரையுடன் தொடங்கியது, அதற்குப்பிறகு ஒவ்வொரு அறிஞர்களாக அவர்களது படைப்புக்களை அரங்கேற்றினர்!!

ஜப்பானை சேர்ந்த 'அகிக்கொ' (Akkiko Akki) முதலில் சிறப்புரை ஆற்றினார், டால்ஸ்டாய் மகளுக்கும் ஜப்பானுக்கும் உள்ள உறவை குறிக்கும் கட்டுரை அது, அதன் பின்னர் எனது நண்பன் மாசிடோனியாவை சேர்ந்த 'கோஸ்டா' சிறைப்புரை ஆற்றினான் !!

மதிய உணவுக்கு பின்னர் மீண்டும் மாநாடு தொடங்கியது,பிரென்ச் பெண்மணி தனது கட்டுரையை வாசித்தார், மூன்றாம் நாள் நிகழ்வின் முடிவில் டால்ஸ்டாய் பற்றி ஒரு ஆவணப்படம் திரையிடப்பட்டது, அத்துடன் மூன்றாம் நாள் மாநாடு முடிவடைந்தது !!!

மாலையில் ஒரு நிகழ்வு, ஆஸ்திரேலியாவில் இருந்து மாணவர் குழு ஒன்று வந்தது அவர்களுடன் சேர்ந்து எங்களுக்கும் ஒரு சிறப்புரை வழங்கினார் ருஷிய பெண்மணி ஒருவர்,அது முடிந்தவுடன் இரவு விருந்து !!

இரவு விருந்தில் ஒரு ஸ்வாரஸ்யமான நிகழ்வு, காலையில் உணவு அருந்திய பின் நான் டீ குடிக்க சென்றேன், அங்கு பாலில்லாமல் ப்ளாக்டீ இருந்தது, அது குடித்து எனக்கு பழக்கம் இல்லை, ஆகையால் டீ குடிக்காமல் சென்றுவிட்டேன், இதை பார்த்த எனது ருஷிய நண்பன் 'கிரில்' இரவு விருந்தின் பொழுது எனக்கு ஒரு பால்பாக்கெட் அன்பளிப்பாக கொடுத்தான், அனைவரும் அங்கு அமர்ந்து இருந்தோம், நேராக என்னை நோக்கி நடந்து வந்து, அந்த அன்பளிப்பை கொடுத்தான் கிரில்!! அனைவரும் ஆச்சிரியதுடன் புன்னகைத்தனர், எனக்கும் முதலில் ஏன் என்று புரியவில்லை, பிறகு இரவு உறங்கும்முன் யோசித்துப்பார்க்கும் பொழுது, அந்த ருஷிய நண்பனின் அழகிய இதயம் புரிந்தது !!

முதல் நாளில் சிகரெட்டை பற்றவைக்க லைட்டர் கேட்டபொழுது, கொடுத்துவிட்டு நீயே இதை வைத்துக்கொள், "இது என் முதல் அன்பளிப்பு" என்று சொன்னவன், அல்லவா அவன், எப்பொழுதும் புன்னைகையோடு இருப்பான் கிரில், பச்சைநிற கண்கள் மெல்லிய தோற்றம் அன்பான நண்பன்!!! இரவு விருந்துக்குப்பின் நானும் கிரிலும் ஒன்றாக புகைபிடித்தோம்!!!

பிறகு அனைவரும் இசை அரங்கிற்கு அழைத்துச்செல்லபட்டோம், அங்கு ரம்மியமான ருஷிய சிம்பொனி இசை வாசிக்கப்பட்டது, ருஷிய பெண்மணி ஒருவர் ஏழுக்கும் மேற்பட்ட ருஷிய பாடல்களை தனது பியானோவில் அழகாக வாசித்து, அனைவரையும் இசையின் மடியில் உறங்கவைத்தாள் !! குளிர்ந்த இரவு, மனதை வருடும் இசை, அந்த தருணம் இன்று நினைத்தாலும் இனிக்கும் !!!

பிறகு நான் என் அறைக்கு சென்றேன், நாளை எனது படைப்பை வெளிப்படுத்தும் நாள்,என்னை தயார்படுத்திக்கொள்ளும் நேரம், ஜன்னல் கதவை திறந்து பார்த்தேன், குளிர்ந்த காத்து வீசியது, இரவின் தன்மையை உணர்தேன், வானில் அழகிய நிலா தெரிந்தது,

சில நிமிடம் வானத்தையே உற்று பார்த்துக்கொண்டு இருந்தேன், கற்பனைகள் அருவிபோல் பொழிந்தன, "கதைமணிக்கோவை" புத்தகத்தை தொட்டு பார்த்தேன், எனது பாட்டனாரின் புகைப்படத்தை பார்த்தேன், எனது பேனாவை எடுத்தேன், காகிதத்தில் எண்ணங்களை தீட்ட ஆரம்பித்தேன் !!! எனது கட்டுரையின் பெயர், "தமிழ் இலக்கியத்தில் லியோ டால்ஸ்டாயின் தாக்கம்" (Leo Tolstoy's influence on Tamil Literature) எண்ணங்கள் வர்ணங்களாக வெளிவந்தன, இரவின் மடியில் புதைத்துக்கொண்டு உறங்க சென்றான் இந்த தமிழ் மகன் !!!

நான்காம் நாள்

இந்த நாள் என் வாழ்க்கையில் மிகவும் முக்கியமான நாள், செப்டம்பர் 12. ஏன் என்றால் முதலில் என் பெற்றோரின் கல்யாண நாள், இரண்டாவது டால்ஸ்டாயின் கல்லறை, மூன்றாவது எனது கட்டுரை வாசிப்பு !!!

காலையில் விழித்து மாநாட்டுக்காக தயாரானேன், பிறகு காலை விருந்து முடிந்தவுடன், அனைவரும் ஒரு வாகனத்தில் டால்ஸ்டாய் வீட்டை நோக்கி பயணித்தோம்!! அவர் பிறந்து, வளர்ந்து,வாழ்த்த வீடு, அங்கு எதுவும் மாறவில்லை, மனம், பொருள், இடம், தன்மை அனைத்தையும் அப்படியே பாதுகாத்து வைத்துள்ளனர்.

வீட்டிற்கு செல்லும் வழியில் ஒரு அழகிய குளம், அதில் வாத்துகள் நீச்சல் அடித்துக்கொண்டு இருந்தன, பிறகு வழி நெடுக்கும் மரங்கள், எத்தனை அழகு, மரங்கள் எங்களை அரவணைத்து அழைத்து சென்றன!!



வீட்டை நெருங்கியவுடன் பிரம்மிப்பு, 'கலினா அலெக்ஸ்சீவா' எங்களை உள்ளெ அழைத்து சென்றார், டால்ஸ்டாயின் கடிகாரம், அவர்கள் குடும்பத்தின் உணவு அருந்தும் அறை பிறகு அவரின் மேஜை, கட்டில், அவர் எழுதிய கையொப்பங்கள், அவரின் உடுப்புகள், பேணா அனைத்தும் நூறுவருடங்களுக்கு முன்னாள் எப்படி இருந்ததோ, அப்படியே பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது !!!

'கலினா' அழகாக ஒவ்வொரு பொருளின் வரலாற்றையும் விளக்கினார், கேட்கவும் பார்க்கவும் ப்ரம்மிப்பாக இருந்தது!! டால்ஸ்டாய் இறந்து பிறகு அவர் உடல் வைக்கப்பட்ட கட்டில் இன்றும் அப்படியே உள்ளது, அவரின் கடைசி நிமிட வாழ்க்கையை உணர்ச்சியோடும் அழகோடும் விளக்கினார் கலினா, அனைவரும் மெய்சிலிர்த்தோம், கண்களில் நீர் எட்டி பார்த்தது, "டால்ஸ்டாய் ஒரு மகான்" என்பதை உணர்தேன், "இந்த இடத்தில் என் கால் பட்டது எனது பாக்கியம், என் பாட்டனாருக்கு நான் வாழ்நாள் முழுவதும் நன்றிக்கடன் பட்டுள்ளேன்", வீட்டை சுற்றிப்பார்த்த பின் வெளியில் வந்து சற்றுநேரம் அமர்ந்தோம், பிரம்மிப்பை விட்டு அகல சில நிமிடங்கள் ஆனது, உலக புகழ்பெற்ற எழுத்தாளர் வீட்டில் நான் உள்ளேன் என்பதை உணர்தேன், மூச்சுவிட தொடங்கினேன், உயிர் வந்தது, அணைத்து அறிஞர்களும் வீட்டின் முன் நின்றுகொண்டு புகைப்படம் எடுத்துக்கொண்டோம்!!

பிறகு மிகவும் போற்றத்தக்க இடத்திற்கு செல்லும் நேரம் வந்தது, டால்ஸ்டாயின் கல்லறை, அழகிய தோட்டத்தில் பாதை, இரண்டு கிலோமீட்டர் நடைபயணம், முழுக்க மரங்களும், அழகிய செடிகளும் நிறைந்து இருந்தன, "கண்முன் தெரிந்தது டால்ஸ்டாயின் கல்லறை".

ராஜ வம்சத்தில் பிறந்தவர், பெரும் பணக்காரர், புகழ் பெற்ற எழுத்தாளர், அவரின் கல்லறை எப்படியிருக்கும்? உங்கள் சிந்தனைகளை சிதறவிடுங்கள், பளிங்குக்கற்களால் வடிவமைக்கப்பட்ட மண்டபம், தங்கத்தாலான சிலை, என்று என்னும் உங்களுக்கு ஏமாற்றம் தான் மிஞ்சும்!! உலக புகழ்பெற்ற சிந்தனையாளர் மற்றும் எழுத்தாளரின் கல்லறை வெறும் ஆறடி நிலத்தில் இருந்தது, பிர்ச் மரங்களுக்கு நடுவே அமைதியாக உறங்கிக்கொண்டு இருந்தார் லியோ டால்ஸ்டாய், அவரின் படைப்புக்களை போலவே அவர் வாழ்ந்துகாட்டியுள்ளார், அவரின் சிறுகதை "ஆறடி நிலம்" மூலமாக மனிதனுக்கு கடைசியில் மிஞ்சுவது ஆறடி நிலம் மட்டுமே, என்ற கருத்தை உரக்க சொன்னவர் டால்ஸ்டாய், அதே போல் அவரின் கல்லறையும் இருக்கவேண்டும் என்று இறப்பதற்கு முன்பே தனது குடும்பத்தாருக்கு கட்டளையிட்டு சென்றிருக்கிறார், இந்த ருஷிய மகான் !!! அவரின் கல்லறையில் பிராத்தனை செய்துவிட்டு, மவுனத்தை கட்டி அணைத்துக்கொண்டு அங்கேயே சிறிதுநேரம் நின்றுயிருந்தேன், என்னுடன் பிரெஞ்ச் பெண்மங்கை கேரேனும் நின்றுஇருந்தார், பிறகு மவுனம் கலைத்துவிட்டு நடைப்பயணத்தை மேற்கொண்டும் !!!

வாகனத்தை நோக்கி வந்தவுடன், அங்கு நின்றிருந்த 'கலினா' என்னிடம் சொன்னார் "வெங்கடேஷ் யூ ஆர் நெக்ஸ்ட்" (you are next),அடுத்து மாநாட்டில் சிறப்புரை ஆற்றப்போவது நான் தான் என்று அறிந்தேன், வாகனத்தில் ஏறி உட்கார்ந்து செமினார் ஹாலை நோக்கி பயணித்தோம் !!!

மதியம் மணி பன்னிரெண்டு இருக்கும், "தமிழ் இலக்கியத்தில் லியோ டால்ஸ்டாயின் தாக்கம்" என்ற தலைப்பில் எனது கட்டுரையை உரக்க வாசிதேன், டால்ஸ்டாய் தோட்டம் முழுவதும் தமிழ் மொழி ஒலித்தது, உலகின் முதல் மொழி, மூத்தமொழி, தொன்மையான மொழி,நம் தமிழ் மொழி, எனது சிறப்புரை பதினைந்து நிமிடங்கள் ஒலித்தது, எனது வாசிப்பு நிறைவடைந்தவுடன் பலத்த கைதட்டு, மணம் குளிர்ந்தது, கண்கள் ஆனந்தத்தில் நீர்துளிகளை சிந்தின, ஐயாயிரம் மைல்கள் கடந்த வந்து, தமிழ் மொழியின் பிரதிநிதியாக என்னை அறிமுகப்படுத்திக்கொள்ள வாய்ப்பளித்த, எனது பாட்டனார் திரு ராவ் சாஹிப் கு கோதண்டபாணி பிள்ளை அவர்களுக்கும் யாசனய போல்யாணவிற்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகள்!!!

உணவு இடைவேளை அறிவிக்கப்பட்டது!! மதிய விருந்துக்கு சென்றோம், நான், பிரெஞ்ச் பெண்மங்கை 'கரேன்', எனது நண்பன் 'கிரில்', மற்றும் அவனது தோழி ஒன்றாக உணவுஉருந்தி கொண்டுஇருந்தோம், அப்பொழுது எதிர் மேஜையில் உணவருந்தி கொண்டுஇருந்த 'கலினா' என்னைநோக்கி நடந்து வந்தார், வெங்கடேஷ் டுடே யூ ஆர் தி பெஸ்ட் ஆப் ஆல் (you are the best of all) என்று சொன்னார், அனைவரும் கைதட்டினர்!!! நான் சந்தோசத்தில் தலைகுனிந்து பாராட்டை அங்கீகரித்தேன், மிகவும் சந்தோஷமான தருணம்!!! மாலை மாநாடு முடிந்தது, அதன் பிறகு அழகிய நிகழ்வுகள் அரங்கேறின !!!

இரவு பாரவெல் டின்னர், எட்டுமணி இருக்கும், அனைவரும் டைனிங் ஹாலில் ஒன்றுகூடினோம், ரஷியன் வைன், ஷாம்பெய்ன் பலதரப்பட்ட உணவு வகைகள் மேஜையை அலங்கரித்தன, நான், என் வலது பக்கத்தில் 'கோஸ்டா', இடது பக்கத்தில் 'கரேன்', எதிரில் 'கலினா', துருக்கியை சேர்ந்த 'சாபரி' அமர்ந்துஇருந்தனர் !!!

"வெங்கடேஷ் இஸ் அ கம்யூனிஸ்ட்" (Venkatesh is a communist) என்று ஆரம்பித்தான் துருக்கிய நன்பன் சாபரி,அனைவரும் ஆச்சிரியதுடன், அப்படியா? என்று என்னை கேட்டனர், அதற்கான தக்க விளக்கத்தை நான் கொடுத்தேன், அனைவரும் அதை அமைதியாக கேட்டனர், பிறகு நான் சொன்னேன் "சாபரி இஸ் அ பாசிஸ்ட்" (sabri is a fascist) என்று, அனைவரும் சிரித்துவிட்டனர் !!! அதன் பிறகு அனைவரும் ஒவ்வொருவராக மொழிபெயர்ப்பாளர்கள் மாநாட்டின் அனுபவங்களை பகிர்ந்துகொண்டனர், எனது வாய்ப்பு வந்தது, நான் எழுந்து நின்று, எனது முதல் நன்றியை 'கலினாவிற்கு தெரிவித்தேன்' ஏன் என்றால் அவர் தான் எனது மின்னஞ்சலை பார்த்து என்னை மொழிபெயர்ப்பாளர்கள் மாநாட்டில் பேசசொல்லி அழைத்தவர், அவருக்கு நன்றியை தெரிவித்துக்கொண்டு, "கதைமணிக்கோவை" புத்தகத்தின் ஒரு பிரதியை அன்பளிப்பாக கொடுத்தேன், அவரும் மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டார் !! எல்லோர் முகத்திலும் சந்தோஷம் !! நானும் பெருமையுடன் சொன்னேன், அணைத்து புகழும் என் தமிழ் மொழியையே சாரும், "தமிழ் வாழ்க" என்று சொல்லிவிட்டு, அமர்ந்தேன்!!!

சிறிது நேரம் விருந்து நடந்தது, அன்பளிப்புகள் கொடுக்கப்பட்டது, வெளியில் வந்து நானும் சாபரியும் உரையாடிக்கொண்டு இருந்தோம், இரண்டாம் உலக போர்,ஸ்டாலின், லெனின், ஹிட்லர் என் அணைத்து தலைவர்களின் என்னங்களுயும் அவர்களின் செயற்பாடுகளையும் பற்றி பேசிக்கொண்டு இருந்தோம், பிறகு என் அறைக்கு சென்றேன், ஜன்னல் கதவுகளை திறந்து நிலவை பார்த்தேன், "அவள் என்னை பார்த்து சிரித்தாள்" "வாழ்த்துக்கள்" என்று கூறினாள், நானும் நன்றிசொல்லிவிட்டு வாழ்த்துக்களை காற்றின் வாயிலாக பெற்றேன், என் வாழ்க்கையில் மிகவும் முக்கியமான மற்றும் மறக்கமுடியா இரவு அது!! இரவை முத்தமிட்டு, நிலவின் மடியில் உறங்கினான் வெங்கடேஷ் குமார் !!!

ஐந்தாம் நாள்

செப்டம்பர் 13. சுவாரஸ்யமான நாள். மாநாடு முடிந்து அனைவரும் மாஸ்கோவிற்கு செல்லஇருந்தோம். இது யாசனயா போலியானா எஸ்டேட் நிருவாகத்தின் வழக்கம், மாநாட்டுக்கு வந்தவர்களை அழைத்து வருவது, பின்பு அவர்களை விடையனுப்பி வைப்பது!!

காலை பத்துமணி, காலை விருந்து முடிந்த பின் அனைவரும் வாகனத்தை நோக்கி பயணித்தோம், நானும் சாபரியும், அனைவரையும் வழியனுப்பிவிட்டு, மீண்டும் டால்ஸ்டாய் தோட்டத்திற்க்கே வரவிருந்தோம், ஏன் என்றால் எனது பயண நாள் செப்டம்பர் 16. வாகனம் நேராக மாஸ்கோவை நோக்கி பயணித்தது, வழி எங்கும் துலா நகரத்தின் அழகிய இயற்கை காட்சிகளை ரசித்துக்கொண்டு பயணத்தை கழித்தேன்!! ருஷிய நாட்டின் பெரும் பகுதி பச்சைநிற விவசாய நிலங்களே, அத்தனை அழகு, மனதை கொள்ளைகொண்டது!! மாஸ்கோவை நெருங்கியதும் சிறு இடைவேளை,பிறகு இரண்டு முக்கியமான பிரசித்திபெற்ற இடங்களை பார்த்துவிட்டு அனைவரையும் வழியனுப்பி வைப்பதுதான் பயணத்தின் நோக்கம்!!

ருஷிய அறிஞர் மற்றும் கவிஞர் அலெக்சாண்டர் புஷ்கின் எஸ்டேட் (Bolshiye Vyazemy) தோட்டத்தை வந்தடைந்தது எங்கள் வாகனம், அங்கு எங்களுக்கு மதிய விருந்து அளிக்கப்பட்டது, பிறகு அரண்மனைக்கு உள்ளே சென்றோம்!! சார் மன்னர் (Tsar) காலத்தில் கட்டப்பட்ட அரண்மனை, புஷ்கின் அவரின் இளமை பருவத்தை இங்கு தான் கழித்தார், அரண்மனை முழுவதும் அழகிய வேலைப்பாடுகள் உள்ள பொருள்களும், வண்ணமயமான ஓவியங்களும், தங்கத்திலும் வெள்ளியிலும் உருவான கலை பொருட்களும் அழகாக ஆவணப்படுத்தி,வைக்கப்பட்டு இருந்தன!! சார் மன்னர் காலத்தில் அவர்கள் உபயோகப்படுத்திய பொருள்கள் அனைத்தும் தன்மை மாறாமல் பாதுகாத்து வைக்கப்பட்டு இருந்தன, அரண்மனையை சுற்றிய பிறகு, அனைவரும் ஒன்றுகூடினோம்!!



கிரில், அவனது தோழி, மற்றும் ரஷிய நாட்டின் சமாரா மாகாணத்தில் (Samara) இருந்து வந்த இரண்டு அறிஞர்கள் எங்களிடம் குட்பை சொல்லி விடைபெற்றனர்!!

அதன் பிறகு நாங்கள் கவிஞர் புஷ்கின் வளர்ந்த அவரது பாட்டி வீட்டிற்கு சென்றோம்! ரம்மியமான இடம், எஸ்டேட் தோட்டத்தில் இருந்து அரைமணி நேர பயணம், மாலை ஆறு மணி இருக்கும் புஷ்கின் வீட்டிற்கு வண்டடைந்தோம்! ருஷிய கிராமிய மனம், அழகிய குளம், வெளியில் புஷ்கின் அவரின் பாட்டியின் மடியில் அமர்ந்துஇருக்கும் ஒரு உயிரோட்டமுள்ள சிலை, அந்த இடத்தை நினைத்து பார்த்தால் இக்காட்சிகள் என்கண்முன் ஓடுகின்றன!! அந்த இடத்தை என்றும் நினைத்துக்கொள்ளும் வகையில் ஒரு ருஷிய மாத்ருஷ்கா பொம்மையை வாங்கினேன்!!

அங்கிருந்து ஏழு மணி வாக்கில், மாஸ்கோ நகரத்தை நோக்கி கிளம்பினோம் மாஸ்கோ வந்தடைந்தோம், அங்கு அனைவரும் விடைபெற்று சென்றனர்! பிரென்ச் பெண்மங்கை கரேன், கோஸ்டா, மற்றும் மற்றநாடுகளை சேர்ந்தவர்கள் எங்களிடம் இருந்து விடைபெற்று சென்றனர்!!

யாசனய போலியானாவை நோக்கி நான் ,சாபரி கலினா, ஆண்ட்ரே நான்கு பெரு மட்டுமே பயணித்தோம்!! மூன்றரை மணி நேர பயணம், மாஸ்கோ- துலா நெடுஞ்சாலையில் எங்கள் வாகனம் சீறி பாய்ந்தது, இரவு பத்துமணிக்கு துலா வந்தடைந்தோம் !! அங்கு கலீனாவும் ஆண்ட்ரேவும் எங்களிடம் இருந்து விடைபெற்று அவர்கள் வீட்டிற்கு சென்றனர், கலினா வசிக்கும் நகரம் துலா!!

பிறகு நானும் சாபரியும் வாகனத்தில் டால்ஸ்டாய் வீட்டிற்கு சென்றோம் !! ரம்மியமான இரவு, அங்கு கால்பதித்ததும் அழகிய நிலவு என்கண்முன் தெரிந்தது, சாபரி என்னிடம் கேட்டான் : டால்ஸ்டாய் மிகவும் அதிஷ்டசாலி தானே? ஏன்? என்று கேட்டேன், இப்படி ஒரு இடத்தில் வாழ்ந்து, வளர்ந்து, உலக புகழ்பெற்ற அறிஞர் ஆனார், எல்லோருக்கும் இப்படி ஒரு வாழ்க்கை அமையுமா? என்றான், கண்டிப்பாக அமையாது, என்றேன்!! "டால்ஸ்டாய் மிகவும் அதிஷ்டசாலி தான்" என்று இருவரும் சொல்லிக்கொண்டு எங்கள் அறைகளை நோக்கி நடந்தோம்!!

அந்த மவுனமாக இரவில் நிலவு மட்டும் எங்களை கண்காணித்துக்கொண்டு இருந்தது, என் அறைக்கு சென்றபின் குளிர்ந்த நீரில் குளியலிட்டு, ஜன்னல் கதவுகளை திறந்து, நிலவிடம் காதலை சொல்லிவிட்டு, உரங்க சென்றேன்!!!

ஆறாம் நாள்

நீண்ட உறக்கத்திற்கு பிறகு தாமதமாக எழுந்தேன்!! நானும் சாபரியும் டால்ஸ்டாய் தோட்டத்தை சுற்றிப்பார்க்க சென்றோம், பல மணிநேரம் நடந்தோம், சற்றென்று மழைபொழிந்தது, இலைகள் மழைபோல் மரங்களில் இருந்து விழுந்தது, கவிஞனுக்கும் எழுத்தாளருக்கும் இதுபோல் காட்சிகளை கண்டால் கற்பனை அருவிபோல் பொழியும்!! எத்தனை அழகு, என்ன அமைதி, என்ன ரம்மியம், பறவைகள் ஓயாமல் பாடிக்கொண்டு இருந்தன, அங்கு ஓய்வு எடுப்பதற்காக அமைக்கப்பட்ட குடில் ஒன்றில் அமர்ந்தோம்! அன்று செப்டம்பர் 14. கலினாவும் ஆண்ட்ரேவும் எங்களை துலா நகரத்திற்கு மாலை வரச்சொல்லி இருந்தார்கள். சற்றே களைப்பு ஆறியபின் எங்கள் அறைக்கு சென்றோம்!!

துலா செல்வதற்கு தயாரானோம், மதியம் ரெண்டுமணிக்கு சாபரி என் அறைக்கு வந்தான், பிறகு இருவரும் கார் ஒன்றை புக் செய்து துலாவிற்கு கிளம்பினோம்!! அரை மணி நேரத்தில் துலா வந்தடைந்தோம் !!!

துலா வந்ததும் என் கண்முன் தெரிந்தது ருஷிய புரட்சியாளர் "விளாடிமிர் லெனின்" அவர்களின் பிரம்பாண்டமான சிலை, கம்பீரமும், வீரமும் அந்த கலை படைப்பில் உயிரோடியது, துலா மாகாணத்தின் பாராலிமன்றம் முன்பு அந்த சிலை பெருமையுடன் நின்றுகொண்டு இருந்தது !!! என்னை கம்யூனிஸ்ட் என்று அனைவரிடமும் அறிமுகம் செய்த சாபிரியை அழைத்தேன், "நண்பா" என் தலைவரும், நான் நேசிக்கும், மதிக்கும் இந்த மனிதருக்கு முன்னாள் நான் இன்று நிற்கிறேன், என்னை புகைப்படம் எடுப்பாயா? -என்றேன், கண்டிப்பாக எடுப்பேன், என்று சொன்னான் என் நண்பன்!! சாபரி பல கோணங்களிலும், பல வடிவிலும் விளாடிமிர் லெனின் சிலைக்கு முன்னாள் என்னை புகைப்படம் எடுத்தான், மனம் மகிழ்ச்சி அடைந்தது.

இருவருக்கும் பசியும் எடுத்தது, நேராக கே எப் சி (KFC) சென்றோம், பீருடன் உணவுண்டோம், பிறகு நேராக ஒரு சிறு கடைக்கு சென்றோம், அந்த கடையின் பெயர் "கார்ல் மார்க்ஸ்" அங்கு இந்தியாவில் உள்ள எனது குடும்ப உறுப்பினர்களுக்காக பல பரிசு பொருட்களை வாங்கினேன், மனைவி ,தங்கை ,அம்மா ,அப்பா!! அப்பொழுது கலினாவிடம் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது, எங்களுக்குகாக கிரெம்ளின் வாசலில் காத்துகொண்டு இருக்கிறார்கள் என்ற செய்தி வந்தது, இருவரும் க்ரெம்ளினை நோக்கி நடந்தோம், துலா ஒரு சோவியத் நகரம், அங்கு இருக்கும் அணைத்து கட்டிடஅமைப்பும் சோவியத் காலத்தை நினைவுபடுத்துகின்றன, அதேபோல் அன்று செப்டம்பர் 14, துலாவின் தேசிய தினம், தெருவெங்கும் நகரவெங்கும் கொண்டாட்டம், அழகாக அலங்கரித்து காட்சியளித்தது கிரெம்ளின்.

அங்கு கலீனாவையும் அண்ட்ரேவையும் சந்தித்தோம், சந்தித்த இடத்தில் பக்கத்தில் 'கார்ல் மார்க்ஸ்' சிலை, தொட்டு வணங்கினேன் !!

பிறகு க்ரெம்ளினுக்கு உள்ளே சென்றோம், அங்கு நடக்கவிருக்கும் கலை நிகழ்ச்சிகாண ஏற்பாடுகள் நடந்துகொண்டு இருந்தன, கலினா அந்தநகரத்தின் வரலாற்றையும், கிரெம்ளின் வரலாற்றையும் மிகஅழகாக எடுத்துரைத்தார்!! க்ரெம்ளினை சுற்றிப்பார்த்து கொண்டுஇருக்கும் தருணத்தில் அழகிய பொம்மை ஒன்றைக்கண்டேன், முயல் குட்டி, இந்தியாவில் சென்னையில் உள்ள ஒரு முயல்குட்டி, என் மருமகளுக்கு அது மிகவும் பிடிக்கும் என்பதை உணர்ந்தேன், பொம்மையை நோக்கி பறந்தேன், பொம்மையை தாட்சண்யகாக வாங்கினேன்!!

க்ரெம்ளினை விட்டு வெளியில் வந்தவுடன், சோவியத் ஸ்ட்ரீட் என்று அழைக்கப்படும் தெருவில் நடந்தோம், அங்கு ஏராளமான நிகழ்வுகள் அரங்கேறிக்கொண்டு இருந்தன, தேசிய தினம் என்பதால் மக்கள் கூட்டம் அலைமோதியது, இங்கு தெருக்கூத்து என்று அழைக்கப்படும் கிராமிய கலைபோல் அங்கு தெருவில் ஒரு இடத்தில் நாடகம் ஒன்று அரங்கேறிக்கொண்டு இருந்தது, இசை, நடிப்பு, வசனம் அனைத்தும் அதே இடத்தில் அரங்கேற்றிக்கொண்டு இருந்தனர் ருஷிய கலைஞர்கள்!! அதில் ஒரு பெண்மணி ஜோக்கர் வேடத்தில் இருந்தாள், என்னைநோக்கி வேகமாக வந்தாள், என்னிடம் ஏதோ ருஷிய மொழியில் பேசினாள், எனக்கு புரியவில்லை, கலினாவிடம் அவள் என்ன சொன்னாள் என்று கேட்டேன், அவள் உன்னை அவர்களின் நிகழ்ச்சியில் பங்குபெறுமாறு கேட்டுக்கொண்டாள், என்றார்!! அந்த பெண்மணியிடம் சென்று கைகுலுக்கி, குட்லக் சொல்லிவிட்டு விடைபெற்றேன் !!

அந்த தெருமுழுவதும் கொண்டாட்டமும் சந்தோஷமும் நிறைந்து இருந்தது, மகிழ்ச்சியான மாலை நேரத்தை இன்று நினைத்து பார்த்தாலும் மனதில் பட்டாம்பூச்சி பறக்கின்றன!! கலினாவும் ஆன்ட்ரியும் எங்களை ஒரு இத்தாலியன் உணவகத்திற்கு அழைத்து சென்றனர் !!

அங்கு எங்கள் இருவருக்கும் விருந்து அளிக்கப்பட்டது, ருஷிய வயினுடன். அப்பொழுது கலினா என்னிடம் கேட்டார், கம்யூனிசம் உனக்கு ஏன் புடிக்கும்? நீ கம்யூனிஸ்ட் கொள்கைகளை எப்படி பார்க்கிறாய்? நான் சொன்னேன், கம்யூனிசம் என்றால் அனைவரும் ஒன்று, இந்த பூமித்தாயின் மடியில் அனைவரும் சமம், அனைவருக்கும் அனைத்தும் கிடைக்கவேண்டும், அனைவரும் ஒன்றாக சந்தோஷமாக வாழவேண்டும், யாருக்கும் எந்த கவலையும் இல்லாமல் மகிழ்ச்சியுடன் இருக்கவேண்டும் என்பது தான் நான் பார்க்கும் கம்யூனிச கொள்கை என்று சொல்லிமுடித்தேன்!!! Good, you are a reformed communist என்று சொன்னார்!!!

பிறகு கலினா சொன்னார், டால்ஸ்டாயும், வாழ்க்கை முழுவதும் கிறீன் ஸ்டிக்கய் தேடினார், (Green Stick)

கிறீன் ஸ்டிக் ஏன்றால் என்ன? என்று கேட்டேன்,

சிறுவயதில் டால்ஸ்டாய் அவரின் சகோதர்களுடன் விளையாடிக்கொண்டு இருக்கும் பொழுது அவரின் அண்ணன் நிகோலாய் (Nikolai) அவரிடம் சொன்னார், என்னிடம் ஒரு ரகசியம் உள்ளது, உலகத்தில் யாரும் இறக்கமாட்டார்கள், யாருக்கும் நோய்வராது, எல்லோரும் சந்தோஷமாக இருப்பார்கள், அந்த ரகசியத்தை ஒரு பச்சை நிற குச்சியில் எழுதி இந்த தோட்டத்தில் புதைத்து வைத்து உள்ளேன், இதை உண்மை என்று நம்பி டால்ஸ்டாய் வாழ்க்கை முழுவதும் அந்த க்ரீன் ஸ்டிக்க்கை தேடினார்!! மரணத்துக்கு பிறகும் அந்த க்ரீன் ஸ்டிக் இருக்கும் என்று கருதப்படும் இடத்தில்தான் தனது உடலை புதைக்க வேண்டும் என்றுசொல்லி சென்றார் லியோ டால்ஸ்டாய், நீங்கள் பார்த்த கல்லறை அந்த இடம்தான்,என்று புன்னகையுடன் சொல்லி முடித்தார் கலினா அலக்சீவா!!!

இரவு விருந்து முடிந்தவுடன் நாங்கள் நால்வரும் துலா நகர வீதிகளில் சுற்றி வந்தோம்,இரவில் மிகவும் அழகாக காட்சியளித்தது துலா நகரம், தேசிய தினம் என்பதால் மக்கள் அனைவரின் முகத்திலும் ஆனந்தம், சிறுபிள்ளைகள் ரோட்டில் ஸ்கேட்டிங் செய்து விளையாடிக்கொண்டு இருந்தார்கள், ஆடவர்கள் உரையாடிக்கொண்டு இருந்தார்கள், பெரியவர்கள் இயற்கையை ரசித்துக்கொண்டு இருந்தார்கள், நான் சாபரி இருவரும் யாசனய போல்யாணா செல்லவேண்டும், கலினா எங்கள் இருவரையும் உள்ளூர் பேருந்தில் ஏற்றிவிட்டார், காலை நான் மாஸ்கோ சென்று பிறகு, அடுத்தநாள் நான் நாடு திரும்பவேண்டும், கலினா எனக்காக மாஸ்கோ செல்வதற்காக துலாவிலிருந்து செல்லும் இரயிலில் டிக்கெட் முன்பதிவு செய்துஇருந்தார், காலை ஏழுமணிக்கு உன்னை துலா இரயில் நிலையத்தில் சந்திக்கிறேன், என்று சொல்லி டால்ஸ்டாய் தோட்டத்திற்கு வழியனுப்பி வைத்தார்கள் கலினா ஆண்ட்ரி இருவரும் !!

இரவு பதினொன்று மணி, டால்ஸ்டாய் தோட்டத்தில் நானும் சாபிரியும் நடந்து சென்றோம், முழு அமைதி, நான் சிகரட் பிடித்து நடந்துவந்து கொண்டிருந்தேன்,எங்கள் விடுதியை நெருங்கியதும், சாபிரியிடம் குட்பை சொல்லும் நேரம், காலை எத்தனை மணிக்கு கிளம்புவாய்? என்று கேட்டான், ஆறு மணிக்கு என்றேன், சரி நான் உன்னை காலை சந்திக்கிறேன் என்றுசொல்லி இருவரும் விடைபெற்றோம்!!

அறைக்கு வந்தவுடன் அழகிய யாசனய போல்யாணா தோட்டத்தை ஒருமுறை நினைத்து பார்த்தேன், பெருமையும் மகிழ்ச்சியும் மனதில் சிறகடித்தன, தமிழ்நாட்டில், கடலூரில் பிறந்து சென்னையில் வளர்ந்து, இன்று ஐயாயிரம் மைல்கள் தாண்டி இங்கு ஒரு தமிழனாக கால்பதித்துள்ளேன், பாட்டனாருக்கு நன்றி, அவரின் கலை படைப்புகளுக்கு நன்றி, இரவே என்னை கட்டிஅணைத்துக்கொண்டு உறங்க சென்றது !!!

மாஸ்கோ

ஏழாம் நாள் செப்டம்பர் 15

காலை ஏழுமணிக்கு துலா ரயில் நிலையத்தை வந்தடைந்தேன்.அங்கு எனக்காக கலினா காத்திருந்தார். அவர் சொன்ன அடையாளம் அங்கு இருக்கும் கடிகாரம் ஒன்றின் பக்கத்தில் நான் நிற்பேன் என்று, அங்கயே அவரை பனிமூட்டத்தின் வழியே சந்தித்தேன். அவர் என் கைகளை பிடித்து ரயிலை நோக்கி அழைத்து சென்றார், ரயிலில் என் இருக்கையை காட்டி அங்கு சென்று என்னை அமர வைத்தார். "பான் வாயேஜ் வெங்கடேஷ்" (Bon Voyage Venkatesh) என்று சொல்லி அன்பாக என்னை கட்டித் தழுவி வழியனுப்பி வைத்தார் கலினா, அத்துடன் ஆங்கிலத்தில் "You are always welcome to Yasnaya Polyana and we will be happy to see you there" என்று சொன்னார்!!

புன்னகையுடன் துலாவையும், கலீனாவையும், யாசனய போல்யாணவையும் விட்டு விடைபெற்று மாஸ்கோவை நோக்கி பயணித்தேன். மாஸ்கோவில் உள்ள டால்ஸ்டாய் வீட்டில் நான் தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன, இரண்டு நாட்கள் முன்பே அதை கலினா செய்துவிட்டார். டால்ஸ்டாய் 1882 முதல் 1901 வரை அவர் குடும்பத்துடன் அங்கு தான் வசித்தார் . பிறகு இறுதி காலங்களில் அவரின் தொட்டிலான யாசனய போல்யாணவிற்கே வந்துவிட்டார்.

இரண்டு நாட்கள் முன்பு வாகனத்தில் யாசனய போல்யாணவில் இருந்து மாஸ்கோ வரை பயணம் செய்தேன், மீண்டும் மாஸ்கோவில் இருந்து யாசனய போல்யாணா வந்தேன். அப்பயணம் எனக்கு தந்த காட்சிகள் வேறு, இப்பயணம் எனக்கு தந்த காட்சிகள் வேறு. நான் வின்சென்ட் வான் கோக்ஹ் (Vincent Van Gogh) அல்லது கிளாடு மோனேவாக (Claude Monet) இருந்திருந்தால் காகிதத்தில் பல வண்ண ஓவியங்களை தீட்டியிருப்பேன். நான் ஓவியன் இல்லை, ஆகையால் என் இதயத்தில் அந்த அழகிய இயற்கை காட்சிகளை வண்ண ஓவியமாக பதிவுசெய்து கொண்டேன். கண்கள் வண்ணமயமாக ஒளிவிட்டன. பெரும்மகிழ்ச்சியுடன் மாஸ்கோ ரயில் நிலையம் வந்தடைந்தேன்.

மாஸ்கோ ரயில் நிலையத்தில் இருந்து மெட்ரோ ரயில் மூலமாக மாஸ்கோவில் உள்ள லியோ டால்ஸ்டாய் வீட்டிற்கு சென்றேன். உலகிலேயே மிகவும் முக்கியமான மற்றும் பரபரப்பான நகரங்களில் ஒன்றான மாஸ்கோவில் சீறிப்பாயும் கார்களும், விண்ணைத்தொடும் கட்டிடங்களுக்கு மத்தியில் மாஸ்கோவின் கருவாக நகரத்தின் மத்தியில் காமோவனிக்கி (Khamovniki) என்கிற இடத்தில் உள்ளது டால்ஸ்டாயின் வீடு. மரங்களால் சூழ்ந்து, இயற்கையின் மடியில் அமர்ந்து இருந்தது அவ்வழகிய வீடு.

அங்கு வாசலில் எனக்காக காத்துகொண்டு இருந்தான் எனது மாசிடோனியன் நண்பன் கோஸ்டா. கோஸ்டா அந்த அருங்காட்சியத்தில் பணிசெய்கிறான். என்னை உள்ளெ அழைத்து சென்று, எனக்காக ஒதுக்கப்பட்ட விடுதியில் என்னை விட்டுவிட்டு, நீ சற்றுநேரம் ஓய்வுஎடுத்துவிட்டு வா, நான் உனக்கு வீட்டை சுற்றிக்காட்டிகிறேன் என்று சொல்லி விடைபெற்றான்.

மாஸ்கோவில் எனக்கு ஒரு நண்பன் இருக்கிறான். அவன் பெயர் மிஹைல் கோர்படோவ் (Mikhail Gorbatov).அவன் சென்னையில் உள்ள ருஷிய கலாச்சார மையத்தின் இயக்குனராக பணியாற்றினான். தற்போது மாஸ்கோவில் உள்ள அரசாங்க அலுவலுகத்தில் பணிபுரிகிறான், நான் மாஸ்கோ வருவது அவனுக்கு தெரியும். மதியம் இரண்டு மணியளவில் சந்திக்க வருகிறேன் என்று சொல்லியிருந்தான், எனது முகவரியை அனுப்பினேன். இரண்டரை மணியளவில் என்னை சந்திக்க வந்தான், எனது முதல் ருஷிய நண்பன் மிஹைல். 2013இல் எனது முதல் ருஷிய பயணத்தின் பிறகு நண்பனாவன் இன்றுவரை என்னுடன் தொடர்பில் இருக்கிறான். அவனும் அவனது ஆறு வயது மகன் ஆடம் (Adam) என்னை சந்திக்க வந்துஇருந்தார்கள்.

என்னை மிஹேல், கார்க்கி சென்ட்ரல் பார்கிற்கு (Gorky Central Park Moscow) அழைத்துச்சென்றான். அங்கு மூவரும் மதியஉணவு உண்டோம், பிறகு ஆடம் விளையாடினான். ஆடம் இந்தியாவில் பிறந்தவன், மிஹைல் சென்னையில் பணிசெய்யும் பொழுது, அவன் பிறந்தான். அவனிடம் நான் ஒரு கேள்வி கேட்டேன், "உனக்கு சென்னை பிடிக்குமா இல்லை மாஸ்கோ பிடிக்குமா" என்று, அவன் சட்ரென்று பதில் சொன்னான் "எனக்கு சென்னை தான் பிடிக்கும், அங்கு தான் நான் வளர்ந்தேன், அங்கு தான் எனது நண்பர்கள் உள்ளார்கள்" என்று, நானும் மிஹைலும் அவனது பதிலை கேட்டு சிரித்துவிட்டோம். மாலை ஆறு மணிவாக்கில் என்னை டால்ஸ்டாய் வீட்டிற்கு அழைத்து வந்து விட்டுவிட்டு குட்பை சொல்லி விடை பெற்றார்கள் மிஹைலும் அவனது மகனும்.

பிறகு கோஸ்டா மாலையில் டால்ஸ்டாய் வீட்டை சுற்றிக்காட்டினான், அங்கு இருக்கும் ஒவ்வொரு பொருளின் முக்கியத்துவத்தையும் வரலாற்றையும் எடுத்துரைத்தான். கேட்கவும் பார்க்கவும் பிரமிப்பாக இருந்தது. அன்றைய காலங்களில் மாஸ்கோவில் இருந்த பெரும் செல்வந்தர்களும், அறிஞர்களும் அரசியல் பிரமுகர்களும் அவரின் வீட்டிற்கு விருந்துக்கு வருவது வழக்கம்.

டால்ஸ்டாய் அந்த வீட்டில் இருக்கும் பொழுது அவரின் ஒரு மகனான அலெஸேய் டால்ஸ்டாய் (Alexei Lvovich Tolstoy) நான்கு வயதில் மரணத்தை தழுவினான். அது டால்ஸ்டாய் மற்றும் அவரின் மனைவி சோபியா இருவரையும் மிகவும் பாதித்தது. இன்றும் கூட அலெஸேய் விளையாடிய பொம்மைகள் மற்றும் அவன் கிறுக்கிய ஓவியங்கள் பத்திரமாக பாதுகாத்து வைக்கப்பட்டு இருக்கின்றன. மனதை தொடும் ஒரு கதை.

இரவில், மின்னும் நட்சத்திரம் போல் ஜொலிக்கும் மாஸ்கோ நகர வீதிகளில் உலாவந்த பிறகு டால்ஸ்டாய் வீட்டில் அவர் மடியில் அன்று உறங்கினேன்.

எட்டாம் நாள் செப்டம்பர் 16

காலையில் எழுந்தவுடன் விமான நிலையம் செல்வதற்காக தயாரானேன், மிஹைல் எனக்காக ஒரு டாக்ஸியை புக் செய்துஇருந்தான், டாக்ஸி டால்ஸ்டாய் வீட்டிற்கு பத்துமணிக்கு வந்தது, விமான நிலையத்தை பதினோரு மணிக்கு வந்தடைந்தேன், மாலை நான்கு மணிக்கு எனது விமானம் துபாயை நோக்கி பறந்தது, இரவு எட்டு மணிக்கு துபாய் வந்தடைந்தேன்.

மாஸ்கோ துபாய் பயணத்தின் பொழுது "முப்பத்தி ஆறாயிரம் அடி உயரத்தில் பறந்துகொண்டு இருக்கும் தருணம்" (36,000 feet above sea level) எனது பயண குறிப்பை எழுத ஆரம்பித்தேன்.

ஒன்பதாம் நாள் செப்டம்பர் 17

மறுநாள் காலையில் நான்கு மணிக்கு தாயகம் வந்தடைந்தேன்.

"வாழ்க தமிழ்"